1982 மார்ச் 2]

700 ரூபாய்க்கு தான் போகிறது. மத்திய அரசினுடைய விவசாயத்துறை அமைச்சர் திரு. பீரேந்திரசிங் அவர்கள் பாராளுமன்றத்தில் கூறியது பத்திரிகைகளில் செய்தியாக இன்று வந்துள்ளது. அதில் மாநில அரசுகளில் தமிழகம் மட்டும் தான் விலையை அதிகமாக்க வேண்டும் என்பதில் எந்த அபிப்பிராயமும் சொல்லவில்லை—விட்டு விட்டார்கள் என்று. ஆகவே மத்திய அரசாங்கத்தினுடைய விலை நிர்ணயக் கொள்கையை கண்டித்து இன்னும் அதிகமான விலையை அல்லது நியாயமான விலையை நிர்ணயித்து அது விவசாயிகளுக்கு கிடைக்கும்படிச் செய்ய நம்முடைய அரசு உடனடியாக, உறுதியாக முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அவ்வாறு கருத்து தெரிவித்திருந்தால், அது தவறான கருத்தாகும். நம்முடைய அரசின் சார்பாக பலமுறை இந்த விலை நிர்ணயம் குறித்து, நானும், மின்சாரத்துறை அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் கூறியிருக்கிறோம். விலை நிர்ணயக் கூட்டங்களிலே கூட கலந்து கொண்டு சொல்லியிருக்கிறோம்.

தென்னாற்காடு மாவட்ட சிறு விவசாயிகளுக்கு இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் வாங்க மானியம் வழங்கும் திட்டம்.

*வினா எண். 309—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்ட சிறு விவசாயிகளுக்கு வறட்சி துயர் துடைப்பு திட்டத்தின் கீழ், இரசாயன உரங்களுக்கும் பூச்சி கொல்லி மருந்துக்கும் மானியம் வழங்கப்பட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில் இது பற்றிய விவரம் என்ன ?

(இ) இத் திட்டத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது ?

(ஈ) இத் திட்டம் வேறு எந்த மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) வறட்சி துயர் துடைப்பு திட்டத்தின் கீழ், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கிராமங்களில் உள்ள சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கு, நெல், பருத்தி, பருப்புகள், நிலக்கடலை,

சிறு தானிய வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் பயிரிட தேவையான உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளை மலிவு விலையில் வழங்குவதற்கு அரசு மானியம் வழங்கியுள்ளது. சிறு விவசாயிகளுக்கு உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளின் நிர்ணயத்த விலையில் 25 சதவீதம் மானியமாகவும், மிகச் சிறிய விவசாயிகளுக்கு 33 1/3 சதவீதம் மானியமாகவும் அரசு நிதி உதவி செய்துள்ளது. இந்த மானியமானது ரொக்கத்திற்கும் கடனுக்கும் வறட்சிப் பகுதியில் இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

(இ) தென்னாற்காடு மாவட்டத்தில் இத்திட்டத்திற்கு 37·63 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஈ) இத் திட்டம் சென்னை, நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் செயல் படுத்தப்படுகிறது.

(முற்பகல் 9.30)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: சென்ற ஆண்டு அநேகமாக எல்லா மாவட்டங்களும் வறட்சியானவை என்ற முறையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதர மாவட்டங்களில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு? எந்தெந்த மாவட்டங்களுக்கு எவ்வளவு எவ்வளவு செலவிடப்பட்டது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இது ஒரு நீண்ட பட்டியல். பெரியார், சேலம், தர்மபுரி, வட ஆற்காடு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீண்ட பட்டியலாக இருக்குமானால் அறிக்கையாக வைக்கலாம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மொத்தம் 304 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அது பற்றி விவர அறிக்கையை வேண்டுமானால் அவை முன் வைக்கலாம்.

Funds for Maintenane of National High ways.

*Q. No. 310—THIRU G. VISWANATHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether funds are allotted by the union government for the maintenance and extension of National high ways in the State in proportion to the length of the roads; and

(b) if not, the action taken in the matter,